# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ பங்குனி 1984 ★ இதழ் 99


## "பீரம்பேணி பாரந்தாங்கும்"



அகில உலக அமைப்பில் மாதர் பெருமை பேசி, அவர்களின் முன்னேற்றத்துக்கு வழித்தடை செய்யாதிருக்கும் மனப்பான்மை கொண்டாட்டமாக நடைபெறுகிறது. உலகக் குடிசனப் பெருக்கத்தில் அரைப்பங்கு மாதர் தொகை எனக் கணித்தவர்களுக்குமுன், சிவபெருமான் தமது அரைப்பங்காக இறைவியை ஏற்றுக்கொண்டார். ஆற்றல் உள்ள திருமால் தம் தேவியை நெஞ்சில் இருத்தியபின்பே திருமாலானார். திரு லட்சுமி. படிப்பாளியாகிய பிரமதேவன் வேதமோத வல்லமை பெற்றமை சரஸ்வதியை நாவிற் கொண்டமையாலேதான். அவளும் மலர்மகளாயிருந்து நாமகளானாள்.

இந்து நாகரிகத்தை வளர்த்த முனிவர்களின் குடிசைகளை அலங்கரித்த பத்தினிகளின் பங்களிப்பு பெரிது. மன்னர் மன்னர்களை உருவாக்கிய கோப்பெரும் பெண்டிர்கள் குந்தவைகள், செம்பியன் மாதேவியர்கள் செய்த பணிகள் பன்முகமானவை. ஆங்கிலேய மன்னன் மூன்றும் ஜோர்ஜ் என்பாரைப் பார்த்து அவருடைய தாயார், 'George be a King' இராசாவாக இரு என்று உற்சாகம் கூறினார். அமெரிக்க ஜனாதிபதிகளின் இல்லத்தரசிகள், சீனப் பெரியார்களின் இல்லத்தரசிகள் செய்த உபகரிப்புகள் வரலாற்றுப் புகழ் வாய்ந்தவை. மத்திய உலகில் நிலவிய ஒரு பழக்கம் பெண்களின் முகத்தைக்கூட மறைத்து உள்வீட்டில் உலாவச்செய்தமை.

---

தமிழ்நாட்டில் ஔவைக் கிழவிக்கு முந்திய மூதாட்டிகள் செய்த பணிகள் பன்முகமானவை. தமிழனுக்கு வீரமூட்டிய பீரம் தாயிடத்தே சுரப்பதன்றித் தகரங்களில் சுரக்கவில்லை. சமணம், பௌத்தம் தமிழ்நாட்டில் பரவிய காலத்தில் கவுந்தியடிகள், மணிமேகலை ஆகிய மாதர்பணி மகத்தானவை. இந்திய சுதந்திரத்துக்குப் பாரதப் பெண்டிரின் உபகரிப்பு பெரும்பகுதி. மகாத்மா சத்திய சோதனையில் சித்திபெறச் செய்தவர் அவரின் மனைவி கஸ்தூரிபா. இன்றைய உலகில் மாதர் ஆண்களின் உத்தியோக உலகில் அருமையாகப் பணி புரிகிறார்கள். அவர்கள் இல்லத்தரசிகள், நிறுவனப் பொறுப்பையும் ஏற்று நடத்துவார்கள். நாரியர் உயர்ந்தால் நாடுயரும்.

எங்கள் நாட்டில் எல்லோருக்கும் 1931இல் சர்வசன வாக்குரிமை கிடைத்தபோது, பெண்களுக்கும் அவ்வுரிமை கிடைத்தது. அந்தப் பலத்தினால் முதல் அரசாங்க சபையிலேயே பெண்கள் பிரதிநிதிகளாயிருந்தனர். திருவாட்டி நேசம் சரவணமுத்து அரசாங்க சபையை ஐம்பதாண்டுகளுக்கு முன் அலங்கரித்த பெருமை பெற்றவர்.

★ மகளிர் ஆண்டுச் சிறப்பிதழ் ★

உ
சிவமயம்






## திருநாவுக்கரசுநாயனுர் தேவாரம்
### திருக்கன்ருப்பூர் – திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

மாதினையோர் கூறுகந்தாய் மறைகொள் நாவா
    மதிசூடி வானவர்கள் தங்கட் கெல்லாம்
நாதனே யென்றென்று பரவி நாளும்
    நைஞ்சுருகி வஞ்சகமற் றன்பு கூர்ந்து
வாதனையால் முப்பொழுதும் பூநீர் கொண்டு
    வைகல் மறவாது வாழ்த்தி யேத்திக்
காதன்மையால் தொழுமடியார் நெஞ்சி
                                        னுள்ளே
    கன்ருப்பூர் நடுத்றியைக் காணலாமே.

திருச்சிற்றம்பலம்

பசுக்கன்று கட்டுவதற்கென்று நடப்பெற்ற தறி, சிவ னுருவாகித் திருக்கோயில் தோன்றிய பழைய வரலாறு உடையதாகலில் திருக்கன்ருப்பூர் ஆன திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை மெய்யன்போடு நாள் தோறும் காலை, நண்பகல், மாலையாகிய முப்போதும் வாசனையுள்ள மலர்களும் நீரும் கொண்டு வழிபட்டு. உமாதேவியாரை இடப்பாகத்திலே கொண்டருளியவரே, வேதங்கள் ஓதுகின்ற நாவினரே, சந்திரனைச் சடையிலே சூடியருளியவரே, தேவர்களுக்குத் தலைவரே என்றெல் லாம் புகழ்ந்து பாடித் துதித்து; நெஞ்சுருகி வஞ்சகமின்றி அன்புகொண்டு தொழுது அடியாரால் அடிமைபூண்டார் நெஞ்சிலே அவர் எழுந்தருளி அருள் செய்வார் என்பது உறுதி.

## சிவநெறியாளரின்
## அன்பின் செயல்களும் ஒழுக்க நெறிகளும்

திருநீறு பூசுதல், நீராடுதல், தோய்த்துலர்ந்த ஆடைக ளணிதல், திருநீறு பூசியவரைத் தேவர் எனமதித்து வணங்குதல், யாவருக்கும் நன்மை செய்தல், இரப்ப வர்க்கு இயன்றவரை கொடுத்தல், திருக்கோயிலை அடைந்து சிவபெருமானைப் புகழ்ந்து பாடி வணங்குதல், இளமை, செல்வம் வளமை நிலையில்லாதவை என உணர் தல், இறைவனை வழிபடுதல், திருவைந்தெழுத்து ஓதல் உறுதிபயக்கும் என உணர்தல், அவரை விரைந்து உயிருள்ளபோதே வழிபடுதல், ஐம்பொறிகளை அடக்கி ஆண்டு, சிவாயநம எனச் சிந்தையில் விடாது நிலைபெற நினைந்துருகி, சிவபெருமான் முப்புரம் எய்தமை, இயமனை உதைத்தருளியமை, அருச்சுனனுக்குப் பாசுபதம் கொடுத் தருளியமை, இராவணனை அடக்கி ஆட்கொண்டருளியமை முதலிய திருவருட் செயல்களைக் கூறிக் கூறி வழிபடுதல் என்பனவும் பிறவுமாம்.




## வெகுளாமை

சினம் கொள்வதற்குக் காரணம் இருந்த போதிலும் சினம் கொள்ளாமை.

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற.

முகத்தில் உள்ளதாகிய புன்சிரிப்பையும், அகத்தில் நிறைந்துள்ளதாகிய அன்பையும் அழித்துவிடும் சினத் திலும் பார்க்க ஒருவனுக்குக் கொடிய பகைப் பொருள் வேறு இல்லை.

### Freedom from Anger

There is no worse enemy than Anger which kills facial smile and gladness of heart.

## 1984 மார்ச் மாத நிகழ்ச்சிகள்


| | | | |
|---|---|---|---|
| 1 | வியாழன் | — | வண்ணை வைத்தீஸ்வரர் கொடி |
| 2 | வெள்ளி | — | அமாவாசை விரதம் |
| | | | வல்லவை சிவன் கொடி |
| 6 | செவ்வாய் | — | இணுவில் சிவகாமி கொடி |
| 8 | வியாழன் | — | கார்த்திகை விரதம் |
| | | | நல்லை சட்டைநாதர் கொடி |
| 10 | சனி | — | காலை 7-32 அட்டமி |
| | | | கச்சியப்பசிவாசாரியர் குருபூசை |
| 11 | ஞாயிறு | — | அட்டமி - நவமி |
| 13 | செவ்வாய் | — | ஏகாதசி விரதம் |
| 14 | புதன் | — | தமிழ்ப் பங்குனி பிறப்பு |
| | | | சைவப் பெரியார் |
| | | | சிவபாதசுந்தரனுர் தினம் |
| 15 | வியாழன் | — | பிரதோஷ விரதம் |
| | | | ஆயிலியம் |
| 16 | வெள்ளி | — | போயா விடுமுறை |
| 17 | சனி | — | பூரணை - பங்குனி உத்தரம் |

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)

★ பணிவு படாடோபத்தை அகற்றுகிறது ★

## திருமண வாழ்வில் பொன்விழா

### ஐம்பதாண்டு நிறைவு



கோப்பாய் சுவாமிநாதர் சுப்பிரமணியம் J. P. விவாகப் பதிவாளர் அவர்களும், உடுவில் இளையதம்பி பெண் கனகம்மா அவர்களும், அன்று 26-1-1934ஆம் நாள் திருமணஞ் செய்து இல்லற வாழ்வில் ஐம்பது ஆண்டுகள் அமைதியாகவும் ஆனந்தமாகவும் இன்புற்று மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் சூழ வாழ்ந்து பொன்விழாப் பொலிவு கண்டு பூரித்துள்ளார்கள். இவர்கள் இருவரும் இன்னும் பல்லாண்டு இல்லறமாய நல்லறத்தில் வாழ் வாங்கு வாழக் குலதெய்வம் அருள்புரிவாராக. வாழ்க.

## புகைத்தல் மேலும் பலகேடுகள்

புகைத்தல் சம்பந்தமாக அங்காதிபாத நிபுணர்கள் அண்மையில் ஆராய்ந்து கண்ட அரிய உண்மைகள் ஆதார பூர்வமாக புதுடெல்கியில் கிடைத்துள்ளன. பதினைந்தாவது பாரம்பரியமாநாட்டு நிகழ்ச்சிகளில் படிக்கப்பெற்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளில் மேலும்பல கேடுகள் கண்டு கூறப்பட்டுள்ளன. தனியொருவரின் தேகசுகம் பாழாவதோடு, அவரின் பரம்பரையே பாழாப்போகுமளவில் புகையிலைப்புகை ஊடுருவுகின்றதாம். இருதய நோய்களை உண்டாக்குவதோடு இளமையில் முதுமையையும் ஏலாச் சுவாகியாந்தன்மையையும் தருகின்றது. புகைப்பவரின் இரத்தத்தில் உள்ள ''செல்ஸ்'' என்னும் அணுக்கள் பழுதாகின்றனவாம். இதனல் நோய்களை எதிர்க்கும் தன்மை இல்லாமற்போவதால் சரீரத்தின் பயனே இல்லாமற் போய்விடுகின்றது என்று பேராசிரியர் இவான்ஸ் M. R. C. E. என்னும் எடின்பரோ வைத்திய ஆராய்ச்சி நிலையத்தில் வெளியிட்டுள்ளார். புற்றுநோய், லூக்கேமியா முதலியனபற்றிச் சொல்லத் தேவையில்லை. அவை புகையிலையின் உடன் பிறவிகள்.

## பிறநாட்டவர் இப்படியும் சொன்னர்கள்

1. அரசியலில் ஈடுபடுவதற்கு எவ்வித படிப்புந் தேவையில்லை.
2. மூங்கில் எல்லாம் குழலாவதில்லை.
3. சிர்திருத்தவாதிகள் பலரும்பிரமசாரிகளாயிருந்தனர்.
4. இரகசியத்தை மறைத்துவைத்திருந்தால் அடிமையாயிருக்கும்.
5. இரகசியத்தை வெளியேவிட்டால் எசமானுகிவிடும்.
6. யுத்தகளம் போகிறவர் எல்லோரும் வீரரல்லர்.
7. ஏகாந்தத்தைப்போல இனிய தோழன் கிடையாது.
8. சத்திரவைத்தியஞ் செய்வதற்குக் கழுகுக்கண், சிங்கத்தின் இருதயம், பெண்ணின்கை வேண்டும்.
9. கண்ணீர் கண்களின் உயர்ந்த மொழி.
10. நாய் குரைப்பவர்கள் எல்லோருங் கள்வரல்லர்.
11. நல்லதைச் சொல்வதற்கு எல்லாநேரமும் நல்லது.
12. குறைந்த துன்பம் பேசும், கூடிய துன்பம் பேசாது.
13. செல்வம் நம்மைத் தேடிவரலாம் ஞானத்தை நாம் தேடிப் போகவேண்டும்.
14. கண்ணுடியைப் பார்க்கும் பெண் வீட்டைப்பார்ப்பது குறைவு.
15. பெண்ணின் அழகு சந்திர ஒளிபோல் இரவல் வாங்கியது.

## யாழ்ப்பாணம் வளர்த்த கலைகள்

பழைய யாழ்ப்பாணத்திலே பாரம்பரியமாகத் தலைமுறை தலைமுறையாகப் பல கலைகள் வளர்த்து வந்தார்கள். கலைகளைப் பரம்பரையாகப் பேணி வளர்த்தவர்களை அவ்வக்கலைகளோடு பொருத்தமான சாதிப் பேரிட்டு மக்கள் வழங்கினர்கள். கைத்தொழில், கைவினை எனப் புகழ் பெற்ற மரபுக்கலைகளைக் கரவக்கூடாது. என்று ஔவையார் கைவினைகரவேல் எனப் பாடியுள்ளார்.

வேளாண்மை, நெசவு, பொன்வேலை, பித்தளைவேலை, செம்புவேலை, மரவேலை, மட்பாண்டவேலை, சாயவேலை, கட்டடவேலை, சிற்பவேலை, ஓவியவேலை, சலவைத் தொழில், மழித்தல் தொழில், எண்ணெய் ஊற்றுந் தொழில், தையல் தொழில், காலணி செய்யுந் தொழில், போர்த் தொழில், முரசறையும் தொழில், இசைக்கலை, நிருத்தக்கலை, முதலியன யாழ்ப்பாணம் வளர்த்த அருங் கலைகளாகும்.

இனி இக்காலத்து அபிவிருத்திச் சபைகள், கிராமோதய சபைகள், சனசமூக நிலையங்கள் எங்கள் பண்பாட்டுக் கலைகளை நன்கு வளர்த்தல் வேண்டும்.

கலை வளர்ச்சியில் மாதர் பங்களிப்பு மகத்தானது. சிலபல ஊர்களில் மாதர் சங்கங்கள் தலையெடுத்துக் கலைகளை வளர்க்கின்ருர்கள். அவர்களைத் தலைதாழ்த்தி வணங்கிப் பாராட்டி ஊக்கப்படுத்துவோமாக.

★ நேர்மை கபடத்தை அகற்றுகிறது ★

## பழந்தமிழ் நாடு

இந்தியாவும் இலங்கையும் இன்னும் தென்கிழக்காசிய நாடுகள் பலவும் ஒன்றுசேர்ந்து ஒரு நாடாய் நிலவிய காலம் ஒரு காலம். அந்தக்காலத்தில் நாட்டின் பெயர் குமரி. மலையின் பெயர் குமரி, ஆற்றின் பெயர் குமரி. குமரி ஒரு பெரிய கண்டம். அதில் நாற்பத்தொன்பது நாடுகள் இருந்தன. குமரிக் கண்டம் கன்னிநாடு எனவும் பெயர் பெற்றது. (இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்குச் சென்று உறைந்தவர்கள் தங்கள் கன்னி இராணியின் நினைவாக வேர்ஜினியா எனப் பெயரிட்டதும் ஒரு வரலாறு.)

குமரிக்கண்டத்தில் நிலவிய நாற்பத்தொன்பது நாடுகளுள் தெங்கநாடு ஏழு, மதுரைநாடு, முன்பாலைநாடு, பின்பாலைநாடு, குன்றநாடு, குணகாரைநாடு, குறும்பனை நாடு என ஏழு ஏழாக அமைந்திருந்தன. அவற்றின் தென் கரையில் பஃறுளி என்னும் பெரிய ஆறும் பன்மலை அடுக்குகளும் இருந்தன.

இக்கண்டத்தில் வாழ்ந்த மக்கள் உயரமானவர்கள். சிவனை வணங்கியவர்கள். உலோகங்களின் உபயோகங்களை அறிந்தவர்கள். இதிகாசங்களில் வரும் இராமர், அருச்சுனன் முதலானவர்கள் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த காலத்தில் நாகரிகச் சிறப்பைக் கண்டு வியந்தவர்கள் இருவரும் சிவபூசா துரந்தரர்கள்.

இதிகாச காலத்தின் பின் வந்த நிகழ்ச்சிகளே வரலாற்று நூல்களில் இடம்பெற்றன. சேந்தன் என்பவன் தென்னாட்டை ஆண்ட வரலாறு பழையது. படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வந்த குடியினர் தமிழர் என்று வடமொழிக் காழ்ப்புள்ள புலவர்களே தமிழையும் தமிழரையும் புகழ்ந்துள்ளனர்.

தமிழ்க் குடிகள் புகழ்பெற்று வளர்ந்து குலம் குலமாகப் பிரிந்த காலத்திலேதான் சேரர், சோழர், பாண்டியர் குலங்கள் தோன்றி, வேந்தர்கள் தலையெடுத்தனர். வேந்தர்களுள் மேம்பட்டவர் வேந்து மேம்பட்ட மன்னர் மன்னராயும் சிறப்புற்றிருந்தனர். பாண்டியர் பண்டையர். சேரர் மலை நாட்டவர். சோழர் நெல்வளம் பெற்றவர்கள். சேரரிடம் யானைக்கொம்பும், சோழரிடம் நெல்லும், பாண்டியரிடம் முத்தும் மிகுதியாயிருந்தன.

## நோயணுகா விதிகள்

நோயணுகா விதிகள் இரண்டு அடக்கேல் ஒன்றை விடேல், நீரைக்காய்ச்சிப் பருகுதல், நெய்யை உருக்கிக் குறைவாகப் பயன்படுத்துதல், மோருக்கு நீர்பெருக்கிப் பருகுதல் முதலியன முக்கியமானவை. இரவில் குறைவாக உணவுண்டு, நேரத்தோடு உறங்கி, அதிகாலையில் நித்திரை விட்டெழுதல், ஒழுங்காகக் காலைக்கடன் செய்தல், நீராடுதல், இயன்றளவு யோகாசனங்கள் செய்து பிராணாயாமஞ் செய்தல், அளவறிந்து உண்ணல், கண்ட இடங்களில் உண்ணாமை, கண்ட நேரத்தில் உண்ணாமை, பழையவை, புளித்தவை, பழுதானவைகளை உண்ணாமை, அளவோடு தேகாப்பியாசஞ் செய்தல், வாரமொருமுறையாவது எண்ணெய்தேய்த்து நீராடுதல், நான்கு மாதத்துக்கொருமுறை சுகபேதி செய்தல் நல்லனவாம்.

மனத்தைப் பொறுத்தவகையில் மகிழ்ச்சியோடிருத்தல், கவலைகொள்ளாமை, கோபங்கொள்ளாமை முதலியன நன்மை பயப்பனவாம்.

இரவில் மரத்தடியில் உறங்குதல், மலர்களை முகர்தல், இரவில் அதிகமாக உண்ணல், கண்டபடி நித்திரை விழித்தல் ஆகாவாம்.

உடம்புச் சுத்தம்போல உடைச்சுத்தம், உறைவிடச் சுத்தம் இன்றியமையாதனவாம்.



சிறுவர் பகுதி:

### வலிமைபேசி வீண்கலகம் செய்தலாகாது

திறம் பேசிக் கலகமிட்டுத்திரிய வேண்டாம் என்பது உலகநீதி. வாய் சொல்லும், பிடரி கும்பிடும் என்பது நாடோடி வாக்கியம். வாயால் வீரம் பேசியவர் பலர் தலைதாழ்த்திக் கும்பிடவேண்டியவரான வைபவங்கள் பலவுள்ளன.

மாயாவி என்பவன் அரக்கரின் போக்கும் அசுர வலிமையுமுள்ளவன். அவன் தந்திரமாகப் போர் செய்யும் சாமர்த்தியசாலி. அவன் தன் வீரத்தைத் தானே கூறிப் போய், மற்றவரை வலியச் சண்டைக்கு இழுப்பவன்.

மாயாவி ஒரு சமயம் வாலி என்னும் வீரனிடம் சென்று வலிமைகூறிப் போருக்கு அழைத்தான். வாலி என்றவன் இராவணனையே வென்ற வீரன். மாயாவியின் அறைகூவலைக் கேட்ட வாலி, ''வலியவந்த சண்டையை விடக்கூடாது'' எனக் கருதிப் போரிடத் தயாராயினன். இருவரும் போரிட்டபோது மாயாவி பல தந்திரங்களைக் கையாண்டான். வாலி எதற்கும் அஞ்சாது மாயாவியை முறியடித்துக் கொன்று, வென்றான்.

## சாப்பிடத்தெரிய வேண்டும்

இரண்டுவேளை உத்தமம். அரைவயிறு உணவு, கால் வயிறு நீர், கால்வயிறு காற்று. வயிறுநிறைய உண்ணல் கேடு. இனிப்பு, புளிப்பு, உப்பு, உறைப்பு, துவர்ப்பு என்ற முறையில் உண்ணுங்கால் கைப்பனவெல்லாம் கடை என்பர். இனிப்பிலிருந்து கைப்புவரை சுவைகளை அனுபவித்தல் முறை.

★ திருப்தி பேராசையை அகற்றுகிறது ★

## பலாமரத்தின் பயன்

மொறட்டுவா நகரம் இன்று மூற்றாக வளர்ந்து தொழில் நுட்ப பொறியியல் துறைகள் சார்ந்த பல்கலைக் கழகத்தையும் கொண்டு தலையெடுத்துள்ளது. மரவேலைக் குப் பெயர்பெற்ற இந்நகரத்தில் பலாமரங்கள் மிகுதி யாயிருந்தமை அத்தொழில் வளத்துக்கு மூலவளமாய் நிலவியது. தளபாடங்கள் செய்வதற்குத் தேக்குப்போல பலா நல்ல மரம் என்பது தெரிந்ததே. மொறட்டுவ சிங்களவர் மரவேலையில் பெரிய நிபுணர். இன்றும் பலாப் பலகை நல்லவிலை. பலாக் கன்றுகள் சாவகச்சேரிச் சந்தை யில் மலிவு. ஏராளமாக வாங்கிப் பலாத் தோப்புகள் உண்டாக்கலாம்.

பலாப்பழம் முக்கனிகளில் ஒன்று. பஞ்சாமிர்தத்தில் ஓரமுதம். பலாக்காய் கறியாகவும், பால்விட்டு அவித் துண்ணவும் அருமையானது. பலாக்காய்ப் பிஞ்சு வறுத்துச் சுவைக்கவும், பொரித்துக் குழம்பாக்கவும் நல்ல கறி. பலாக்கொட்டை கறியாக்கவும், மாவாக்கிப் பயன்படுத்த வும் பலவிதமாக உதவும்.

சிவலிங்கமயமான பலாமரம் தமிழர் வாழ்வில் கைகொடுத்தது. அதன் வளர்ச்சி வளவுகளில் வளங் கொடுத்தல் வேண்டும்.

## எழுதாமறை

ஆற்றல் அழியும் எனக் கருதிய அந்தணர்கள் அக் காலத்தில் வேதங்களை ஏட்டில் எழுத இசையவில்லை. ஏட்டில் எழுதுவதை விட்டுச் செவியாரக் கேட்டு மன மாரப் பாடமாக்கிப் பாரம்பரியமாக ஓதிவந்தார்கள்.

பாடமாக்கும் ஆற்றலை இன்றைய அந்தணர்களும் இளமை முதல் பயிற்சியிற் கொண்டு வருதல் நல்லது. இந்த நற்கருமம் அண்மையில் ஆரம்பிக்கப்பெற்றுள்ளதை அறியக்கூடிய ஒரு வாய்ப்பும் கிடைத்தது.

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயில் கும் பாபிடேக தினத்துக்கு முன் தினங்களில் யாகசாலைகளில் பிராமணச் சிறுவர் சிலர் பெரியவர்களோடு சேர்ந்து பெருந்தொகையான சுலோகங்களை ஓதினார்கள். ஏற்றம் நிறுத்தம் இறக்கம் என்னும் குரலசைப்புகள் ஒலிப்பிறப்பு கள் நன்றாயிருந்தன. குருக்கள் அவர்களின் முயற்சி துரித மாக விரிவாக வியாபகமாக வளர்வதாக. பெருங் கோயில் களையண்டிக் குருகுலங்கள் பணிபுரிவனவாகுக.

## யாழ் இளையதம்பி வித்தியாசாலை

நல்லூர்த் தொகுதி வட்டாரக் கல்வியதிகாரி சிவ. விநாயகமூர்த்தி அவர்களும், மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா அவர்களும் சமூகமளித்திருந்த இது எங்கள் பாடசாலை விழா கோலாகலமாக அதிபர் கணேசதாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அயலவர், பழைய மாணவர்கள், பெற்றோர் ஆகிய பெரியவர்கள் பாடசாலை வளர்ச்சிக்காகப் பல வகையிலும் உபகரித்துப் பாராட் டப் பெற்றுள்ளார்கள்.

# அருள் விருந்து

( ஆதாரம்: தர்மசக்கரம் )

1. பண்பைப் போன்ற ஆபரணம் வேறுகிடையாது.
2. மானமே மானிடவர்க்குப் பெரிய அணி.
3. முயற்சியுடையவன் வாழ்வு விரிவடைகிறது.
4. தூய்மையே நிறைமொழிக்குப் பிறப்பிடமாகும்.
5. ஒழுக்கம் வழுவிய அரசியல் ஆளை ஒழித்துவிடும்.
6. பொறுப்பைப் புறக்கணிப்பவனுக்குப் பெருமை யில்லை.
7. பிறர்க்கென வாழ்தல் பெரிய வேள்விக்கு நிகர்.
8. சத்தியம் என்பது எவர்க்கும் தனியுரிமையாகாது.
9. தன்னைத் திருத்தியமைப்பவன் பெரிய மேதை.
10. பிறரைத் திருத்த முயல்பவன் பெரிய பேதை.
11. சுயநலப் பற்று ஈற்றில் நரகமாக மாறும்.
12. நாம் நாடித்திரியும் நலன் நம்மிடையேயுள்ளது.
13. தெளிந்த எண்ணம் திருந்திய செயலாகும்.
14. ஆர்ப்பாட்டத்திலும் அமைதியே சிறந்தது.
15. சோம்பேறிகளால் உலகுக்குத் தொந்தரவு அதிகம்.
16. கேடுகளுக்கெல்லாம் காரணம், வித்து சுயநலம்.
17. மௌனம் என்பது சிறந்த ஆத்ம சாதனமாகும்.
18. மனம் செம்மையானால் உலகில் எதிரிகள் இல்லை.
19. சந்தேகம் மனிதனை அலைக்கழிக்கிறது.
20. நம்பிக்கை மனிதனைத் திண்ணியன் ஆக்குகிறது.
21. எண்ணமும் இயல்பும் மனிதசொரூபமாகும்.
22. ஆடம்பர வாழ்வு அழிவுக்கு அத்திவாரமாகும்.
23. உறுதிப்பாடும் நேரான உழைப்பும் மனித சாதனை.
24. எண்ணிப் பார்க்க முடியாதவன் அறிவிலி.
25. எல்லா நோய்களிலும் கொடியது ஆசை.
26. சுயநலத்தைவிடப் பெரிய பகையில்லை.

## பாராட்டும் பரிசும் பெற்ற சாரண வீரர்

மில்க்வைற் தொழிலதிபரின் மரம்நாட்டும் பணியிலும், பனையபிவிருத்திப் பணியிலும் பங்களிப்புச் செய்த கிளி நொச்சி மாவட்ட குழுவைச் சேர்ந்த மா. புவனேந்திரன் அவர்கள், மாவட்ட ரீதியில் முதற் பரிசையும், அகில இலங்கை ரீதியில் இரண்டாம் பரிசையும் பெற்றுக் கொண்ட செய்தி சாரணரிடையே பெரிய குதூகலத்தை உண்டாக்கியுள்ளது. இந்தச் சாரண வீரனின் செயற் திட்டத்தை ஆணையாளர் லயனல் சில்வா அவர்கள் பாராட்டியதோடு, கொழும்பில் நடைபெறும் பெருவிழா வில் பரிசும் சான்றிதழும் அளிப்பார்.

★ நேர்மையுள்ளவன் தன்னம்பிக்கையுள்ளவன் ★

## அண்மைக் காலத்து அரும்பெருங் கும்பாபிடேகம்

யாழ்ப்பாணம் கண்டிரா வகையில் சென்ற 6-2-84 இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோயில் மகா கும்பா பிடேகம் நடைபெற்றது.

கும்பங்கள் யாகசாலைகள், அந்தணர்கள், ஓம குண் டங்கள், அலங்காரப் பந்தர்கள், பல்லியங்கள், வாத்தியங் கள், ஓதுவார்கள், மந்திரவொலிகள், புதிய தெய்வ மூர்த்தங்கள், கோபுரம் முதல் விமானங்களின் புதுப் பொலிவுப் பாவைகள், சித்திரங்கள், அபிடேகத் திரவியங் கள், கிரியா முறைகள், ஆராதனைகள், பக்தர்கள் கூட் டம், ஆசியுரைகள், மலர் வெளியீடுகள், பெரியவர் கூட் டம், பக்தர்கள் ஈட்டம், மெய்சிலிர்த்து ஆடினோர் பாடி னோர் கூட்டம் என்றெல்லாம் தனித்தனி விரிக்கிற் பெரு மளவில் எழுதக்கூடிய அளவில் வரலாற்றுப் பெருமை வாய்ந்த ஆலயத்தில் வாழ்க்கை காணப் பேறமைந்த கும்பாபிடேகம்.

அண்மையில் காசியில் நடைபெற்ற சைவசித்தாந்தப் பெருவிழாக் காணச் சென்ற மில்க்வைற் தம்பதிகள், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, செய்தியாசிரியர், அண்ணா கோப்பி நடராசா ஆகியோர் வடக்கே இமயம் வரை சென்றபோது, நடராசா அவர்கள் அரும்பாடுபட் டுக் கொண்டு வந்து சேர்த்த பாணலிங்கப் பெருமான் சொர்ணபந்தனம் செய்யப் பெற்றுப் பிரதிட்டை செய் யப் பெற்றமை, புதிய நடராசர் சிவகாமித் தாயார் கோலாகலக் கொலு, புதிய பஞ்சமுக விநாயகரின் அரும் பெருந் திருவுரு என்பன பழைய பிள்ளையார் கோயிலைப் புதுப் பொலிவும் தெய்வ சபைப் பொலிவும் சேரப் பெருங் கோயிலாக்கிவிட்டன. ஸ்தபதி சோமசுந்தரம் அவர்களின் கைவண்ணத்தில் தெய்வத் திருவுருவங்கள் களிநடம்புரி யும் வகை கண்டின்புற வேண்டியவை.

மேகமும் அஞ்சும் வகையில் கொடைக்கரம் நீண்ட பரராசசேகர மன்னன் அர்த்த மண்டப நுழைவாயில் வளை வில் கைகூப்பித் தலைசாய்த்து உடம்பைக் கூசிக்குனித்து முக மலர இருதயம் குவிய வணங்கும் உருவைத் திருமய மான சிற்பத்தில் தீட்டித் திரட்டிய செந்தமிழ்ச் சைவக் கைவினையைப் பாராட்டாமல் விடமுடியாது.

கலை மலர்ந்த இணுவில் அன்றும் இன்றும் இயல் இசை நாடகம் வளர்த்த வளர்க்கும் பேறும் பெருமையும் பெற்றது. இன்று பக்திமயமான சைவச் சூழலில் வர்த்தகப் பெருக்கம், கைத்தொழில் பெருக்கம் விவசாயத்தை விஞ்சி வளருகின்றன.

பணத்தைப் பாராது திரவிய லோபமின்றிச் செய்யப் புகுந்த கும்பாபிடேகத்தில் மந்திரலோபம், கிரியாலோபம், பாவனைலோபம் எதுவுமே இல்லை இல்லை. அடைமழை வந்து சூழ்ந்து பொழிந்த வேளையிலும் எவ் விட குறையுமின்றி ஆகமநெறி பிசகாது, அரும்பெருங் கும்பாபிடேகம் அமைவாக நடைபெற்றது.

செல்வப் பிரபுக்கள் வரிசை தவறாது ஒருவர் பின் ஒருவராய் வந்துகூடி என்பணி என்ன? என்பங்களிப்பு என்ன என்று உரிமையோடும் பக்தியோடும் பண்பாடு தவறாது பணிந்து கேட்டுக் கடமை செய்த கட்டுப்பாடும் கட்டுக்கோப்பும் முன்மாதிரியானவை.

இணுவில் நடராச ஐயரவர்களும், அம்பிகைபாகப் புலவரவர்களும் அமரர்களாகி ஆகாச வாசிகளாய் வந்து நின்று வணங்கி ஆசி கூறிய அமைப்பில் அந்தணர்ப் பெருக்கமும் புலவர்கள் கூட்டமும் பொருந்தியிருந்தனர்.

---




## பகவத்கிதை

துறவைக் காட்டிலும் கருமயோகம் சிறந்தது. பகைத் தலும் விரும்புதலும் இல்லாதவன் நித்திய சந்நியாசி.

சாங்கியமும் யோகமும் ஒன்றே. ஒன்றைக் கடைப் பிடிக்க மற்றதும் கைகூடும். சாங்கியத்தையும் யோகத் தையும் ஒன்றாகக் காண்பவனே காட்சியுடையவன் - திருஷ்டா.

யோகம் இல்லாதவன் சந்நியாசம் பெறுதல் கடினம். யோகத்தில் பொருந்தியவன் விரைவில் பிரமத்தை அடை கிறான்.

யோகத்தில் மருவித் தூய்மை பெற்றோன் தன்னை வென்றவனாவன். இந்திரியங்களை வென்றவன், எந்தத் தொழிலைச் செய்தாலும் அவன் அதில் ஒட்டுவதில்லை.

''நான் எதுவுஞ் செய்யவில்லை'' என்று ''என் செய லால் ஆவது ஒன்றுமில்லை'' என்று உணர்ந்தவன் உண்மை யறிந்த யோகி.

செய்கைகளையெல்லாம் பிரமத்தில் சார்த்திவிட்டுப் பற்றுதலை நீக்கி, எவன் எச்செயலைச் செய்கிறானோ, அவன், நீரில் தாமரையிலைபோல் பாவத்தால் தீண்டப்படுதல் இல்லை.

---

## வீட்டு வளவில் வளரவேண்டியவை

அறுகம்புல், திருநீற்றுப்பச்சை, முடக்கொற்றான், வல்லாரை, மயிர்மாணிக்கம், குப்பைமேனி, பொன்னா வரசு, மூசுமூசுக்கை, தும்பை, தூதுவளை, முருங்கை, துளசி, கற்பூரவள்ளி, கீழ்வாய் நெல்லி, வேம்பு, எலு மிச்சை, இஞ்சி, மாதுளை, முசுட்டை, பாவட்டை, சாரணை, நாயுருவி, கீழ்காய் நெல்லி, வாதநாராயணி, சுண்டை, பிரண்டை, மணித்தக்காளி, நித்தியகல்யாணி, கோரை, நெல்லி, அசத்தி என்பனவும் பிறவுமாம்.

---

★ சிந்தனையில்லாத படிப்பில் பயன் கிடையாது ★

# இது எங்கள் பாடசாலை

தேனீக்கள், கறையான்கள், எறும்புகள் முதலிய சின்னஞ்சிறு பிராணிகள் கூட்டுறவு முயற்சியில் பென்னம் பெரிய கூடுகள், புற்றுகளைக் கட்டிப் பல்கிப் பெருகி வாழும்போது, ''நான், எனது'' என்று கூறுவதில்லை. ''எங்கள் கூடு, எங்கள் புற்று'' என்ற கருத்தில் சுறு சுறுப்பாக உழைக்கின்றன.

★ ★ ★

''உங்கள் இராணி எங்கள் இராணி, எங்கள் இராணி உங்கள் இராணி'' என்னும் சக்திவாய்ந்த சுலோகம் ஐம்பதுக்கும் மேற்பட்ட பெரிய நாடுகளை ஒன்றிணைத்து, பொதுநலவாயம் என நிலவுமாறு செய்தது.

முன்னர் பிரித்தானியாவுக்குச் சொந்தமாயிருந்த அகன்ற நிலப்பரப்பு, நாளடைவில் சுதந்திரம் பெற்றுத் தனிநாடுகளான பின், முன்னர் அதிகாரப் பிடியில் அமைந்தவாறே இன்று அன்புப் பிடியில் அமைந்துள்ளன.

இங்ஙனம் அமைந்த நாடுகள் ஒன்றுக்கொன்று ஆதர வாய்க் கொண்டும் கொடுத்தும் உபகரித்தும் உபகரிக்கப் பெற்றும் அபிவிருத்திப் பாதையில் ஒன்று சேர்ந்து அணி நடை நடக்கின்றன.

★ ★ ★

## புற்போல், கிறிக்கற்

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாம் பழகிய விளை யாட்டுகளில் புற்போல், கிறிக்கற் முதலியன கூட்டு முயற்சியை மனக்கொளச் செய்கின்றன. இவற்றில் நான் எனது என்ற சுயநலப் போக்கில்லாமல், ''எங்கள் பாட சாலை'' என்ற மனப்பான்மையில் கூடி விளையாடும் தன்மை நிலவுகிறது.

★ ★ ★

## பழைய மாணக்கர்

ஒரு பாடசாலையின் சொத்து, நிதியம் என்பனவுள், அதன் பழைய மாணுக்கர் மதிப்பிடமுடியாத மாபெரும் நிதியமாகும். பல பாடசாலைகளின் பழைய மாணுக்கர் கள் தங்கள் அறிவுக் கண்ணைத் திறந்துவிட்ட கல்வி நிலையத்தைக் கருத்தில் கொண்டு ஒன்றுகூடி ஆண்டு தோறும் ஆயிரமாயிரமாக உபகரித்து ஒத்தாசை புரிந்து கட்டியெழுப்புகிறார்கள். O. B. A. என்னும் மூன்றெழுத்து களின் சக்தி பெரிது. சென்ற காலத்து மாணுக்கரின் பற்றும் பரிவும் இவ்வாறாயின், இன்று பயிலும் மாணுக் கரின் பற்றும் பரிவும் எவ்வாறாக இருக்கவேண்டும்? சற்று சிந்தித்துப்பாருங்கள்.

## சில்லும் சிலைக்கம்பும்

மனித நாகரிகத்தில் கற்காலம் கடந்து, சில்லுக் கண்ட காலம் ஒரு பொற்காலமாயிற்று. தலைச்சுமை யாகவும் தோள்பாரமாகவும் சுமந்தும் தூக்கியும் சென்ற வர்கள், சில்லுச் சுழல வண்டி செய்து சொகுசாக உப யோகித்தார்கள், இடம்பெயர்ந்தார்கள்.

தமிழர் வாழ்வில் இசைத் துறையில் தோற்கருவியாய முழவு வாத்தியத்தை அறிந்த பின்பே அவர்கள் வண்டிச் சில்லைக் கண்டார்கள் போலும். ''கொழுஞ்சூட்டருந்திய திருந்து நிலை ஆரத்து முழவினன்ன உருளி'' என வரும் சங்கப் பாடலில் சில்லின் அமைப்பும் சிலைக்கம்பின் பொருத்தமும் விளங்குகிறது.

ஒரேயளவான சிலைக் கம்புகள் பல சில்லுருளுவதற்கு ஆதாரமாயமைந்த நிலையில் எது பெரிய கம்பு, எது சிறிய கம்பு, எது முதற் கம்பு, எது கடைசிக் கம்பு, எல்லாம் ஒரேகம்புகள். கம்புகளில் ஏற்றத்தாழ்வு இருந் தால், சில்லு உருளமாட்டாது. ஒரே சீரான கம்புகளில் ஒரு கம்பை முதலில் தொட்டு ஏனைய கம்புகளை எண்ணு வர். அது First among equals. இந்த அமைப்பு பாடசாலை ஆசிரியர் மத்தியிலும் நிலவுதல் நன்று.

## பழந்தமிழ்ச் சைவ சமய நூல்கள் சிந்திச் சிதறிய பின்னர் வடமொழியில் வந்தவை ஆகமங்கள்

யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையைச் சேர்ந்த தா. பொன்னம்பலபிள்ளை அவர்கள் இற்றைக்கு எழுபது ஆண்டுகளுக்கு முன், திருவாங்கூரில் மதுபரிபாலன ஆணை யாளராய் ஆதிக்கமுற்றிருந்த வேளையில் செய்த ஆராய்ச்சி பூர்வமான கருத்து முடிபுகளை ஆண்டுதோறும் தமிழ் நாட்டில் நடைபெற்ற சைவமாசங்களில் பெரியவர்கள் முன்னிலையிற் படித்துவந்தார்.

செல்வங்களின் இருப்பிடமாய திருஇடமாய தேயமே திராவிடம் என ஆராய்ந்தவர், திராவிடத்தின் சிதைவு களே தென்கிழக்கு ஆசிய தீவுகள் என்றெல்லாம் முடி புகட்டியவர்; அந்நாட்டவரின் சமயம் சைவம் என்றும், சைவம் நுதலிய நூல்கள் பல தமிழில் இருந்தன என் றும், அவை சிதைந்து சிதறிப்போன பின், எஞ்சி நிலவிய சில பகுதிகளின் திரட்டுகளே ஆகமாகக் கிடந்தன என் றும் கூறியுள்ளார். இவற்றுக்கெல்லாம் ஆதாரமாக அவர் காட்டும் சான்றுகளில் ஒன்று: சிவஞானபோதம் என்னும் கருத்துக்கு கௌரவ ஆகமத்தின் பாவவிமோசனப் படல மும், திருத்தொண்டர் புராணத்துக்கு வடமொழியில் பிற்காலத்தில் வந்த உபமன்யு பக்த விலாசம் முதலியனவு மாம் என்க.

## ரிஷிரிணம்

ரிஷிரிணம் என்பது ஞானிகள் நமக்குப் போதித்த அறிவை, நாம் மனங்கொண்டமைக்கு நன்றி செலுத்து முகமாக அந்த அறிவைப் பலருக்கும் பயன்படும் வகை யில் பகிர்ந்து பரப்பி அறியத்தருவதாம். தாம் பெற்ற அறிவை ஒருவன் மனத்திலேயே கொண்டு மறைவதில் எவ்விதபயனும் இல்லை.

நூல் வல்லார் தாம் தாம் கற்றுணர்ந்த நூல்களின் நுண்பொருள்களை இலவசமாக இளந்தலைமுறைகளுக்கு ஈதல் ரிஷிரிணமாகும். இது வேதம் விதித்த கடமைகளுள் ஒன்று.

★ நல்லாரைப் போற்றுபவன் நல்லவனாகிறான் ★

# யோகம் ஒரு யோகம்

ஒருவனுக்குப் பெருமை, பீடு, பொருள் வளம், கல்வி, சிறப்பு, மேன்மை முதலியன கைகூடினுல், அதை அவனுக்கு நல்ல யோகம் என்று பொதுவாகக் கூறுவர்.

யோகம் என்பது இந்து சமயத்தில் விதிக்கப்பெற்ற நான்கு வகை ஒழுக்கக் கோவைகளுள் மூன்ருவதாக அமைவதுமாகும். அந்த நிரையில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கையும் குறிப்பிடுவர்.

இவற்றுள் யோகம் என்பது இணைப்பைக் குறிப்பதாகும். யுஜ் என்னும் முதலில் வந்தது அது. யோகம் கடவுளையும் ஆன்மாவையும் இணைப்பது என்ருலும், ஆன்மாவைக் கடவுள் சிந்தனையோடு இணைப்பது எனக் கூறின் மிகையாகாது.

எனவே நின்ருலும் கிடந்தாலும் இருந்தாலும் உடம்பை எவ்விதம் வளைத்தாலும் உள்ளம் இறைவனேடிருப்பது யோகம் எனலாம். பத்மம் என்னும் தாமரை மலரில் அமர்ந்திருக்கும் பிரம தேவனும் யோகு செய்கிருர். ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா ஆலிலையில், காலை மடித்துப் பெருவிரலை வாயில் வைத்தபடி யோகு செய்கிருர், கைலாசசங்கர் பத்மாசனத்தில் யோகு செய்கிருர், தட்சிணுமூர்த்தி சுகாசனத்தில் யோகு செய்கிருர்.

சுந்தரமூர்த்திநாயனுர் எதைச் செய்தாலும் அது யோகமாயிருந்தது. யோகஞ் செய்வதால் அல்லல்கள் நீங்கி, அமைதியும் ஆனந்தமும் இன்பமும் இணைந்த சிந்தனை உண்டாகும்.

காலையில் கண்விழித்ததும் கடவுளை நினைந்தவாறே தாம் செய்யப் போவன யாவும் கடவுள் அருள் முன்னிற்கச் செய்வதாக அர்ப்பணித்து சங்கற்பித்துச் செய்வதில் ஒரு பூரண நிறைவு உண்டாகிறது.

கடமைகள் யாவும் கடவுள் கட்டளையின் வண்ணம் வந்து வந்து சம்பவித்தவை எனக் கருதி மனநிறைவோடு செய்பவனுக்கு, இரவில் நிம்மதியான தூக்கம் உண்டாகும். அந்த நிலையில் இறையருள் சிறிது சிறிதாகப் புலப்படுவதும் உண்டு.

கலியுகத்தில் இறையருள் பெரும்பாலும் கனவுலகிலே தான் சிந்திக்கின்றன என்பதைப் பெரியவர்கள் வாழ்வில் நன்கறியலாம். தன்னை இறைவனுக்கு அடிமையாக்கி என் கடன் பணிசெய்து கிடப்பதே என்று கிடப்பவர்களுக்கு இறைவன் கடன் தாங்குதல் அன்றி வேறென்னவாகும். இறைவனை இரந்து தாங்கிக்கொள்ளே என்று பாடுவதற்கு நமக்கு ஒரு யோக்கியம் வேண்டும்.

நாம் செய்யும் கடமையைச் சிறப்பாக நேர்மையாக, நிறைவாக, மனமாரச் செய்தல் தலைசிறந்த யோகமும் வழிபாடுமாகும்.

## மிளகு

இன்று கறியெல்லாம் மிளகாய்த்தூள் மணக்கிறது உறைக்கிறது. முன்னர் தமிழர் வாழ்வில் மிளகு கறிகளுக்குச் சுவையூட்டியது. மிளகு மூலிகையும் மருந்துமாகும். ஒல்லாந்தர் காலத்திலும் யாழ்ப்பாணத் தமிழர் மிளகாயை நன்கறியவில்லை. ஆண்டுதோறும் யாழ்ப்பாணத்தில் 50,000 ருத்தல் மிளகு விலைப்பட்டதாக ஒரு குறிப்புக்கிடைத்துள்ளது.

(தேங்காயையும் மிளகாயையும் குறைத்து, மிளகை உபயோகித்துக் கறி சமைக்கப் பழகுதல் நல்லதாகும். சிந்தித்துப் பாருங்கள். நல்லதானுல் செயற்படுத்திப் பழகி எல்லோருக்கும் பரவலாகப் பழகவையுங்கள்.)

# தமிழரும் வேளாண்மையும்

கார்காத்த வேளாளர் என்னும் பெயர் தமிழரன்றி வேறெவர்க்கும் என்றும் வழங்கவில்லை. வானம் பார்த்த பூமிக்கு வளம் உண்டாக்குவதற்கு எப்போ மழை பெய்யும் என்று ஏங்கியிருந்து, அது பெய்யும்போது, ஒரு துளி நீரும் வீணுகப் போகாமல் தேக்கிக் குளங்களை நிரப்பி, வேண்டும்போது வயல்களுக்குப் பாய்ச்சிய வித்தகம் வேளாண்மைத் துறையில் ஒரு சாதனை.

நிலத்தை நான்கு திணையாக வகுத்த தமிழர் வயலையும் வயல்சார்ந்த நிலத்தையும் மருதம் என வகுத்தமை வியத்தகு விஞ்ஞானமோ, அன்றி வித்தகமோ. மருதம் என்பதும் நெல் என்பதும் தமிழ். இவற்றைப் பிறநாட்டார் எம்மீது புகுத்தவில்லை.

# பாட்டிலே கேள்வி

பிறையணிவோன்

1. உலோக வகையில் மிகவதிக
   உறுதி வாய்ந்த உலோகத்திற்
   குலகோர் இட்டபெயர் தெரிந்தால்
   உடனே எனக்குக் கூறிடுவாய்.
2. வித்தோ பூவோ காய்கனியோ
   விரும்பி உண்ணும் இலையுடைய
   சத்துக் கொடியில் இலையந்தத்
   தழைத்து வளரும் கொடி யாது?
3. நீருக் கடியில் திமிங் கிலத்தால்
   நிற்க முடியும் படியான
   நேரம் என்ன என்ற றிந்தால்
   நிமிடக் கணக்கில் கூறிடுவாய்.
4. சுத்தமான தங்கத்தின்
   தூய்மை குறிக்க எப்பதத்தைச்
   சுத்தி யடிக்கும் பொன்வினைஞர்
   சொல்வார் தெரிந்தால் சொல்லிடுவாய்.

1. வெனேடியம் 2. வெற்றிலை 3. இருபது
4. இருபத்துநான்கு கரட்டு = பத்தரைமாற்றுத்தங்கம்.

★ இலட்சியம் உள்ளவன் முன்னேறுகிறன் ★

## வன்னிநாடு வளம்பெறப் பாடுவோம்

வன்னிநாடு வளமிக்கதாய் முல்லைநிலம் என்னும் காடும் காடுசார்ந்ததாயும், மருதம் என்னும் வயலும் வயல் சார்ந்ததாயும் இருந்தது. வன்னி மேற்கில் மாதோட்டத்தையும் கிழக்கில் திருக்கோணமலையையும் எல்லையாகக்கொண்ட பெரு நிலப்பரப்பாகும். வன்னியர் தன்னுதிக்கம் பொருந்திய வீரராய்க் கண்டி மன்னருக்கும் யாழ்ப்பாண மன்னருக்குமிடையில் சிற்றரசர்களாய் வலிமை வீரம் பொருந்தியவர்களாய் இருந்தனர். வன்னி பெரும்பாலும் யாழ்ப்பாணத்து அரசர்கள் அதிகாரத்துக் குட்பட்டிருந்தது.

வன்னிப்பிரதேசம் முற்காலத்தில் தென்னமரவாடி, முல்லியவளை, கருநாவற்பற்று, பனங்காமம், பெருங்களி முதலிய பெரும்பிரிவுகளாயிருந்தது.

முல்லை மணம் வீசும் பிரதேசத்தில் தமிழ் நாகரிகம் இல்லறத்தால் சிறந்து விளங்கியது. இல்லிருத்தல் முல்லை என்பது அகப்பொருள் இலக்கணம்.

இன்றைய முல்லையில் பழந்தரும் மரங்கள் நன்றாக உண்டாகின்றன. மூங்கில் வளமுள்ள நாட்டில் கைத்தொழில் தலையெடுத்தல் வேண்டும். விதம்விதமான கூடைகள் செய்து கைப்பணி வளர்ச்சிகாணலாம். முல்லை நிலத்து நாட்டுப்பாடல்கள் பெருந்தொகுதியாக வெளிவருதல் வேண்டும்.

தமிழாற்றல்மிக்க புலவர் பலர் முல்லையில் முத்தமிழ் வளர்க்கிறார்கள். அவர்களுக்கு நாம் நினைப்பூட்டி உற்சாகப்படுத்தவேண்டும். இம்முயற்சியில் பிரவேசித்தவர்களுக்கு வணக்கம். வாழ்க.

## பங்குனி நினைவு

பங்குனி மாதம் பகலவன் ஒளி படிப்படியாக அதிகரிக்கத் தொடங்குகிற காலம். பங்குனி மாதத்தில் அறிவாளிகள் பலர் தோன்றி அறிவொளி வீசியிருக்கிறார்கள். வடக்கில் கணேசையா அவர்களும் கிழக்கில் விபுலானந்த அடிகளாரும் பங்குனி மாதத்தில் தோன்றியவர்கள். கணேசையா அவர்கள் 18-3-1878 முதல் 8-11-1968 வரை வாழ்ந்தவர். விபுலானந்த அடிகளார் 27-3-1892 முதல் 19-7-1949 வரை வாழ்ந்தவர்கள். இருவரும் செந்தமிழ் வளர்த்த செம்மல்கள். இருவரும் ஈழநாட்டுக்கப்பாலும் புகழ்பெற்றவர்கள். இருவரும் செயற்கரிய செய்த வீரர்கள். இலக்கிய இலக்கணம் வளர்த்தவர்களும் வீரர்களே என்பது தோமாஸ் கார்லையில் என்பாரின் கருத்தாகும்.

## மனமகிழ்ச்சி

காலையில் நித்திரை விட்டெழும்போது, தங்கம், கண்ணாடி, குத்துவிளக்கு, வலதுகை, தாமரைப்பூ, கன்றும் பசுவும், சூரியன், வயல், கடல், மிருதங்கம், மனைவியின் முகம் முதலியன பார்த்தல் மனத்துக்கு மகிழ்ச்சியும் நிறைவும் தரும்.

## மில்க்வைற் தொழிலகத்தார் மற்றொரு திருமணம்



துன்னாலைதெற்கு வேலுப்பிள்ளை தம்பதிகளின் மைந்தன் பரமானந்தன் அவர்களுக்கும், அதே ஊரினரான கந்தசுவாமி தம்பதிகளின் புதல்வி சாந்தரூபதி அவர்களுக்கும், லட்சுமி பவனம் என்னும் மணமகள் இல்லத்தில் 3-2-84 வெள்ளிக்கிழமை இரவு திருமணம் நிறைவேறியது. மணமகள் இல்லத்து உபசார வைபவங்களில் நவீல்ட் பாடசாலை உபஅதிபர் கோபாலகிருஷ்ணன் அவர்களும், அடுத்தநாள் உபசாரத்தில் மில்க்வைற் தொழிலதிபரும் பிரதமவிருந்தினராய்க் கலந்து சிறப்பித்தனர். மணமக்கள் பெறற்கரும் பேறுகள் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வாராக.

## மாசி எள்ளு மடியிற் பணம்

இளைத்தவன் எள்ளு விதை, எச்சவன் எள்ளு விதை, எள்ளுக்கு ஏழு உழவு, மாசி எள்ளு மடியிற் பணம் என்றெல்லாம் எள்ளைப் பற்றிப் பழமொழிகள் எழுந்துள்ளன. தமிழர் வாழ்வில் எள் தலையாய நவதானியம். எண்ணெய் என்பது எள்ளில் வந்த தைலமேயாம். அது எல்லாத் தைலங்களுக்கும் பொதுப் பெயராய் வழங்கும் அளவில் பெருமை பெற்றது.

எள்ளின் எண்ணெய் தலையாயதும் நல்லதுமானதால் நல்லெண்ணெய் எனப் பெயர் பெற்றது. தலையாய எண்ணெய் எனக்கண்டு தலைக்கும், கண்களுக்கும், காதுகளுக்கும் நல்லெண்ணெய் தேய்த்தும் விட்டுப் பயன் காண்கின்றார்கள். உடம்புக்குத் தேய்க்கவும், உணவு தயாரிக்கவும் நல்லெண்ணெய் சிறந்தது. பாகாய் இடித்தும் பனங்கட்டி சேர்த்துண்ணவும், பக்குவமாய்த் துவைத்துப் பழஞ்சோற்றுடன் உண்ணவும், இட்டலியில் விட்டுண்ணவும், பருப்புக்கறி, வெள்ளைக்கறி, கீரைக்கறிகளில் விட்டுண்ணவும் எண்ணெய் சிறந்தது. கத்தரிக்காய் பொரிப்பதற்கும் பயற்றில் விட்டுண்ணவும் பயனளிப்பது எண்ணெய் விற்கிற விலையிலே எள் விதைத்தல் அவசியமாகிறது. மாசி எள்ளு மடியிற் பணம்.

★ படிப்பில்லாமல் சிந்திப்பது ஆபத்தானது ★



## கலகலப்பான திருமணம் ஒன்று

மில்க்வைற் தொழிலகத்தில் வேலைபார்க்கும் தொழிலாளர்களுள் சிலர் பேச்சுப்புலன் அற்றவர்கள். ஆனால் வேலைத்திறன் வாய்ந்தவர்கள். இவர்களை நல்ல திறமைசாலிகளாய் உருவாக்கிவிட்டவர்கள் கைதடியில் உள்ள நிலையத்தார். அந்த நிலையத்தின் பழைய மாணுக்கர்கள் பலர் ஒருவரையொருவர் தமது விரலசைவுகளால் உரையாடி உணர்ந்தறிந்து கொள்கின்றனர்.

புலோலிதெற்கு தம்பு தம்பதிகளின் புதல்வன் கதிர்காமநாதன் நல்ல உழைப்பாளி. அவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த செல்வி ஈஸ்வரி இராசரத்தினம் அவர்களை 29-1-84 ஞாயிற்றுக்கிழமை காலை நெற்கொழு வைரவர் ஆலய மண்டபத்தில் திருமணஞ் செய்தபோது சகபாடிகள் கலகலப்பாக உற்சாகமாக உடன்நின்று திருமணத்தை நிறைவேற்றியபோது, உபஅதிபர் க. கோபாலகிருஷ்ணன் அவர்களும், மில்க்வைற் தொழிலதிபர் க. கனகராசா அவர்களும் முன்னின்று எல்லாக்காரியங்களையும் கவனித்தனர். தம்பதிகள் வாழ்க.

## பருத்திச் செய்கையும் நெசவுத் தொழிலும்

ஒல்லாந்தர் இலங்கைக் கரைநாடுகளை ஆண்ட காலத்தில் 1658 — 1795 யாழ்ப்பாணத்தில் பருத்திச் செய்கை ஊக்கம் பெற்றது. இங்கே விளைந்த பஞ்சை நூற்று நெசவு செய்யவும், ஏற்ற முறையில் சாயம் தோய்க்கவும் தமிழ் நாட்டிலிருந்து தொழில் தெரிந்தவர்களை வரவழைத்தார்கள்.

மன்னார், பூநகரி முதலிய பகுதிகளில் பருத்தி நன்றாக விளைந்தது. பருத்தித் தோட்டங்களில் தென்மராட்சிப் பகுதியிலிருந்து பலர் வேலைவாய்ப்புப் பெற்றனர். வன்னிப் பகுதியின் கிழக்கு மூலையிலும் பருத்தித் தோட்டங்கள் அதிகமாகவிருந்தன.

இற்றைக்கு 320 ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தில் 125 பேர் பருத்திச் செய்கையிலும், 762 பேர் சாயம் தோய்க்கும் தொழிலிலும் ஈடுபட்டனர். இத்தொழிலை ஊக்குவிப்பதற்காக ஒல்லாந்தர் அரசாங்கம் முற்பணம் கொடுத்ததும் உண்டு. பின்னர் நெசவு செய்து வந்த உருப்படிகளுக்கு நல்ல விலைகொடுத்ததும் உண்டு. ஒல்லாந்தர் காலத்தில் சாயங் காய்ச்சுதல் ஒரு அநுபவம் மிக்க தொழிலாகவும் கலையாகவும் நிலவியது. சாயவேர், நீலம், மெழுகு முதலியன மூலப் பொருள்கள்.

அன்னாளில் ஆனைக்கோட்டையில் சாயங் காய்ச்சுந் தொழில் நிபுணர் வாழ்ந்தனர். நெடுந்தீவு, காரைதீவு முதலிய இடங்களில் முதல்தரமான சாயவேர்கள் கிடைத்தன. மன்னாரில் கிடைத்தவை இரண்டாந்தரத்தனவாயும், வன்னி வேர்கள் மூன்றாந்தரத்தனவாயுமிருந்தன.

## Learn Your English

### Give one word for each sentence

1. Close friend
2. To make a request
3. Musical drama
4. To remain
5. Moisture formed on grass at night
6. Before noon
7. A state of great anger
8. Beam of light
9. Metal hat
10. Used for locking doors
11. To make wild animals obedient
12. Female horse
13. Fights between two men
14. To attempt
15. Sound of horn
16. To make a speach
17. A note

1. pal 2. ask 3. opera 4. stay 5. due
6. morning 7. rage 8. ray 9. helmet
10. key 11. tame 12. mare 13. duels
14. try 15. toot 16. speak 17. chit

## இது எங்கள் பாடசாலை

ஒருவாரகாலமாக இது எங்கள் பாடசாலை என்னும் விழா கோலாகலமாக நடைபெற்றது. பாடசாலைகளில் பலவிடங்களில் விருந்தாளியாகச் சென்ற மில்க்வைற் தொழிலதிபர் காலநிலை வாய்ப்பைக்கண்டு மரம் நாட்டும் பணியில் ஈடுபட்டுப் பரிசுகளும் வழங்கினார்கள்.

## மருதநிலம்

தமிழன் கண்ட நால்வகை நிலங்களுள் மருதமும் ஒன்று. வயலும் வயல்சார்ந்த நிலம் மருதம். வயல் விளைவைத்தவிர, அந்தநிலத்தில் மேட்டுப்பாகத்தில் உண்டாகும் காய் கறி, பழவகைகள் உடம்புக்கு நன்மை தருவன, சுவையுள்ளன, சத்துள்ளன.

★ உடல் வலிமையை ஆற்றல் எனலாகாது ★

முற்ரெடர்

## சைவம் மணக்கும் தமிழ் நூல்கள்

76. சிவஞானதீபம்
இரேவணசித்தர்

77. சிவஞானத்தெளிவு
சிதம்பரத்தம்பிரான்

78. சிவஞான தேசிகர் கலம்பகம்
சிவப்பிரகாச சுவாமிகள்

79. சிவஞானபோதம்
மெய்கண்டார்

80. சிவஞானபோத உரை
பாண்டிப்பெருமாள்

81. சிவஞானபோத பாடியம்
சிவஞானமுனிவர்

82. சிவஞானபோத லகுவசனம்
காரைக்குடி சொக்கலிங்கஐயா

83. சிவஞானயோகி இரட்டை மணிமாலை
பாண்டித்துரைதேவர்

84. சிவதத்துவவிவேகம்
சிவஞானமுனிவர்

85. சிவதருமோத்தரம்
மறைஞான சம்பந்தர்

86. சிவதூடண கண்டனம்
சங்கரபண்டிதர்

87. சிவதுடண திரோதம்
சோமசுந்தர நாயக்கர்

— தொடரும்

## நாட்டுப்பணி

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சேர் இராமநாதன், சேர் அருணுசலம் முதலானோர் தேசியவீரர் வரிசையில் சிறப்பிடம் வகிப்பதன் காரணம் அவர்கள் நாட்டுக்குச்செய்த நற்பணியேயாகும். நாட்டுப்பணி இறைபணி. நாம் எங்கள் நாட்டுக்கு எந்தவகையில் தியாகம் செய்யலாம். எம்மை ஒறுத்து ஏழைகளுக்கு நல்வாழ்வு அளிக்கலாம் என்றெல்லாம் சிந்தித்துச் செயற்படுதல் நமக்கும் பிறர்க்கும் நாட்டுக்கும் நன்மை தரும்.

நமது வளவுகளில் ஓரடிச்சதுர நிலம்கூட வீணுகாமல் அதற்கேற்றமுறையில் ஏதாவது பயன்தரு செடியை நாட்டி மரக்கறிக்கான காய்கறிகளையாவது உண்டாக்குதல் ஒரு பணி. உணவுற்பத்தியை வீட்டளவில் நிறைவுசெய்ய நாம் பழகிக்கொள்ளலாம்.

வாரத்தில் ஒருநாள், இயலாவிடின் ஒருவேளை பேருண்டியைத் தவிர்த்துப் பசியால் வதங்கும் ஏழைக்கு உதவலாம்.

## அச்சுவினியும் ஆயிலியமும்

சிவதொண்டன் வட்டத்தில் அச்சுவினி நட்சத்திரமும், ஆயிலிய நட்சத்திரமும் ஒளி காலும் தாரகைகள். அன்றி, பங்குனி மாதத்தில் அவை பெரும் பக்தி விழாவுக்கான தினங்களாயும் உள்ளன.

நல்லூர்த் தேரடிக்குத் தெற்குப் பக்கத்தில் ஒரு வயற் காணி ஓரத்தில் ஓட்டைக் கொட்டிலில் வாழ்ந்த ஆராய்ச்சி உத்தியோகத்தரான வல்லிபுரம் செல்லப்பா என்பவர், பூர்வபுண்ணியவசத்திருல் ஆன்ம ஈடேற்ற முற்று, அனைத்துலகையும் துறந்து, பிச்சைக்காரனுயும், பைத்தியக்காரனுயும் வாழ்ந்தார். அர்த்த சாமத்தின்பின் அருகேயுள்ள நல்லூரானுடன் நல்லுறவுகொண்டு தனக்குள்ளே பேசித் தருந்த விளக்கமும் பெற்றுவந்தார்.

செல்லப்பா சுவாமிகளிடம் சிந்தையைப் பறிகொடுத்த கொழும்புத்துறை அம்பலவாணர் யோகநாதன் என்பார் பண்டசாலைப் பொறுப்பதிகாரியாயிருந்த அரச உத்தியோகத்தர். உத்தியோகத்தை உதறிய யோகநாதன், உலகத்தை வெறுத்து, இறைவனுடன் இணைந்து யோகரானுர்.

குருவும் சீடரும் சேர்ந்து ஊரையும் நாட்டையும் சித்தந் தெளிய வைத்தார்கள். குருவின் திருவார்த்தையாக வெளிவந்த நான்கு வசனங்கள் நான்கு மகா வாக்கியங்களாயின. நான்மறைகளின் சாரமெனச் சீடரின் செவியில் புகுந்தன.

ஒரு பொல்லாப்பும் இல்லை
எப்பவோ முடிந்த காரியம்
நாம் ஒன்றும் அறியோம்
முழுதும் உண்மை.

அன்று மெய்கண்டார் அருளிய சின்னஞ்சிறு சிவஞான போதம், அருணந்திசிவம் செவியிற் புகுந்து பென்னம் பெரிய சிவஞான சித்தியார் என வெளிவந்தாற்போல, செல்லப்பா சுவாமிகளின் வாக்கியங்கள், யோகசுவாமிகள் செவியிற் புகுந்து பென்னம் பெரிய நற்சிந்தனைக் களஞ்சியமாக வெளிவந்தன. பார்விரித்த சித்தியார் போல, நற்சிந்தனை இன்று உலகமெங்கும் ஒலிக்கிறது. அமெரிக்காவை அசைக்கிறது. தூரகிழக்கைத் துள்ளியாடச் செய்கிறது.

அன்று 1915ஆம் ஆண்டுப் பங்குனி அச்சுவினி முதல் அச்சுவினி நாளுக்கு அமோக வரவேற்புக் கிடைக்கிறது. அன்று 1964ஆம் ஆண்டு ஆயிலியம் தொடக்கம் ஆயிலிய நாள் பெருவிழாவாகக் கொண்டாடப் பெறுகிறது. சனாதன தருமத்தைக் கட்டிக்காத்துப் பெருக வைப்பதில் குருவும் சீடரும் அச்சுவினியிலும் ஆயிலியத்திலும் வந்து போகிறார்கள். வாழவைக்கிறார்கள்.

## நித்திரைச்சுகம்

கோரைப்பாயில், இலவம் பஞ்சுத் தலையணையிட்டு, மெல்லிய ஆடை தளர்ச்சியாகத்தரித்து, இடதுபக்கம் திரும்பி உறங்குதல் உடம்புக்கும் மனதுக்கும் உத்தமம். இடதுகையிற் படுப்போம் என்பது சித்தர் பாடல்.

★ உள்ளத்தின் திண்மையே ஆற்றல் ஆவது ★

Simple words convey

## Great Thoughts of Swami Sivananda

As you think so you become
As are your thoughts so your life
Better thoughts bring better actions
Pure thought is a mighty force
All your strength must conquer mind
Purify and still the thoughts
Calm mind will remove ignorance
The subtle part of food forms the mind
Food is what we gather through senses
Learn to see God everywhere
This is real food for the eye
Sublime divine thoughts give everything
Have freedom of thought
Free yourself from prejudice
Think of the immortal self
Love you and love all
An evil thought harms a lot
Every evil thought is a sword
Entertain lofty thoughts
Your life will be noble and ideal

## கூட்டுறவு நாட்டுயர்வு

ஒரு காலத்தில் உலகில் 77 விதமான கூட்டுறவுச் சங்கங்கள் நிலவிய காலத்தில் இலங்கையில் 40 விதமான சங்கங்கள் இயங்கின. வங்கிகள், ஆலைகள், வடிசாலைகள், மொத்த விற்பனவு, வைத்தியசாலை, விவசாயப் பண்ணை, மோட்டார் வள்ளப் போக்குவரத்து, மோட்டார் பஸ், தோட்டங்கள், குடிசைத் தொழில், பாற்பண்ணை, அச்சுக் கூடம், பதிப்பகம், கடன்கொடுக்கும் சங்கம், விற்பனைச் சங்கம் முதலியன நாம் காண நன்கு நடைபெற்றன.

யாழ்ப்பாணத்தான் கூட்டுறவுக்குப் பெயர்பெற்றிருந்த காலம் ஒரு காலம். கூட்டுறவு ஒரு தேசிய எழுச்சி. தரகர் வேலையைத் தவிடு பொடியாக்கி இலாபத்தைப் பகிர்ந்து நன்மை கடைப்பிடித்த காலம் ஒரு காலம்.

நல்லவர்கள் நாட்டில் இருந்தால் சட்டதிட்டங்கள் பிரமாணங்கள் தேவையில்லை. நடைமுறை தானே கைவந்த பாடமாய்விடும். எல்லோரும் ஒருவருக்கு, ஒருவர் எல்லோருக்கும் All for each and each for all என்பதில் தான் என்ன ஒற்றுமை, கருத்துப் பலம், நம்பிக்கை, நாட்டபிமானம், கௌரவம், சுபீட்சம், வேலைவாய்ப்பு.

பொருளாதார அபிவிருத்திக்குக் கூட்டுறவு ஏணிப் படி. உற்பத்தியாளரையும் நுகர்வோரையும் இணைக்கும் பாலம். ஒரு காலத்தில் 16,36,000 அங்கத்துவ பலம் வாய்ந்த கூட்டுறவு இயக்கம் இலங்கையில் இயங்கியது. இலங்கையில் 13962 சங்கங்கள் நல்ல முறையில் நடந்தன.


நீலந்தோய்க்கும் வேலைச்சிரமம் வேண்டாம்.
உங்கள் சிருடைகள் மிகுந்த வெண்ணிறமடைவதற்குச்
சிறந்த வழி - சிரமமில்லாத வழி - சிக்கனமான வழி
ஒன்றே ஒன்றுதான். அது
மில்க்வைற் நீலங்கலந்த நீலக்கட்டிகளை
சம்பூரண சலவைக்காக உபயோகித்தலாகும்.
பளிச்சிடும் வெண்மைக்கு பாவியுங்கள்
மில்க்வைற் நீல சோப்




10 மேலுறைகளை அனுப்பி
மில்க்வைற் செய்தி,
யோகாசன புத்தகம் - விளக்கப் படம்
அல்லது வெளியீடுகளில் ஒன்று
இவற்றில் ஏதாவதொன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.


(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

### 1984 மார்ச் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 24 | சனி | — | காலை 6-35 அட்டமி |
| 25 | ஞாயிறு | — | அட்டமி - நவமி |
| 26 | திங்கள் | — | காலை 7-37 வரை நவமி<br>சைவப் பெரியார்<br>நா. கதிரைவேற்பிள்ளை தினம் |
| 28 | புதன் | — | ஏகாதசி விரதம்<br>மருதடி விநாயகர் கொடி<br>நீர்வேலி கந்தர் கொடி |
| 29 | வியாழன் | — | பிரதோஷ விரதம் |

சமயமானது இவ்வுணவைக் கொள்வது, அவ்வுணவைத் தள்ளுவது என்ற இவைகளில் தங்கியிருக்கவில்லை; அது கடவுளை உள்ளத்தில் உணர்வதிலேயே தங்கியுள்ளது.

— மகாத்மா காந்தி

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-3-84.